**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP NO.7/2025**

2026ம் ஆண்டு ஜீலை மாதம் 28-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை -II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

பெயர் -திரு.அன்பழகன் PW-1

<u>2-ம் மற்றும் 3-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

1) விபத்து நடந்தது தென்வடல் ரோடு என்றால் சரிதான். என் மீது மோதிய வாகனம் மாருதி கார் தெற்கிலிருந்து வடக்காக வந்தது என்றும் சொன்னால் சரிதான். நான் மேற்கிலிருந்து கிழக்காக சென்ற போது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. மாருதி கார் தெற்கிலிருந்து வடக்காக அதனுடைய பாதையில் சரியாகத்தான் வந்தது என்றும் நான் தான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி குறுக்காக கடந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சைக்காக ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டிருக்கும் நிரந்தர ஊனம் அல்ல என்று சொன்னால் சரியல்ல. தற்காலிகமானது தான் என்றும் சொன்னால்

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:24:44 +0530

சரியல்ல. எனக்கு எந்த விதமான வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிர் மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் மூன்றாவது எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

2) மருத்துவமனை சிகிச்சைக்கு சென்றபோது நான்தான் குடிபோதையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால் சரியல்ல, நான் குடிபோதையில் இருக்கவில்லை. விபத்து சமயத்தில் நான்தான் நிதானம் இல்லாமல் குடிபோதையில் ரோட்டில் நிதானம் இல்லாமல் நடந்து சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய கவனக்குறைவும், அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் கேட்டிருக்கும் இழப்பீடு மிகைப்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya Date: 2026.07.28 18:24:53 +0530

Chief Judicial Magistrate,
Erode.